# 21 திருமந்திரம்,பெரியபுராணம் திருப்புகழ்

## திருமந்திரம்



திருமந்திரம் திருமூல நாயனாரால் பாடப்பெற்றது; மூவாயிரம் பாடல்களைக் கொண்டமைந்தது; பத்தாம் திருமுறையாகத் தொகுக்கப்பட்டுள்ளது.

திருமந்திரப் பாடல்கள் எளிய மொழி நடையில் ஆழமான கருத்துக்களுடன் பாடப் பெற்றுள்ளன. திருமந்திரம் தோத்திர நூலாக மட்டுமன்றி சாத்திர நூலாகவும் போற்றப்படுகிறது. பின்வரும் திருமந்திரப் பாடல் சிவநாமத்தின் சிறப்பை உணர்த்துவதாக அமைந்துள்ளது.

*திருச்சிற்றம்பலம்*

***சிவசிவ என்கிலர் தீவினையாளர்***<br>
***சிவசிவ என்றிடத் தீவினை மாளுஞ்***<br>
***சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர்***<br>
***சிவசிவ என்னச் சிவகதி தானே.***

*திருச்சிற்றம்பலம்*

### பொழிப்பு

சிவாயநம எனும் பஞ்சாட்சர மந்திரத்தின் சுருக்கமான - சூக்கும - வடிவமான 'சிவ சிவ' என்ற மந்திரத்தை தீவினையாளர் சொல்லமாட்டார். சொல்வாராயின், தீவினை ஒழியும்; புண்ணியம் வளரும்; தேவருமாவர்; முடிவிலே சிவகதியாகிய முத்தியும் பெறுவார்.

## பயிற்சி

1. திருமந்திரத்தைப் பாடியவர் யார்?
2. திருமந்திரம் எத்தனையாம் திருமுறையில் அடங்குகிறது?
3. பஞ்சாட்சர மந்திரத்தைச் செபிப்பதனால் உண்டாகும் நன்மைகள் எவை?

## பெரியபுராணம்



பெரியபுராணம் சேக்கிழார் சுவாமிகளாற் பாடப்பெற்றது. சுவாமிகள், சோழ அரசனின் முதன்மந்திரியாக இருந்தார். சமயாசாரியர்களின் பெருமையை எமக்கு உணர்த்திய பெருங்குரவர் இவரேயாவார். அறுபத்துமூன்று நாயன்மார்கள் (தனி அடியார்கள்) மற்றும் ஒன்பது தொகை அடியார்கள் ஆகியோரின் வரலாற்றைப் பக்திரசம் ததும்ப இயற்றியுள்ளார்.

காரைக்காலம்மையார் பற்றிய வரலாற்றில் சேக்கிழார் பாடிய பாடலையும் அதனூடாக காரைக்காலம்மையாரின் வேண்டுதலையும் இங்கு நாம் காண்போம்.

இறைவனால் 'அம்மையே!' என்று அழைக்கப்பெற்ற பெரும் பேற்றைப் பெற்றவர் காரைக்காலம்மையார் ஆவார். கணவனான பரமதத்தன் அவரைத் தெய்வம் எனக் கருதி வழிபட்டான். இதனால் காரைக்காலம்மையார் இறைவனைத் துதித்து , யாவரும் வெறுத்து ஒதுக்கும் பேயுருவை வேண்டிப் பெற்றார். அவர் திருக்கைலாசநாதரைத் தரிசிக்கும் ஆவலுடன் விரைந்தார். இறைவன் விரும்பி உறையும் தலமாதலால் அதனைக் காலால் மிதிக்காது தலையினால் நடந்து மலையேறிச் சென்றார். வருகின்ற உருவைக் கண்டு அதிசயித்த உமையம்மை இவர் யாரெனப் பெருமானிடம் வினவினார். ''வருமிவள் நம்மைப் பேணும் அம்மை காண் உமையே! இப்பெருமை சேர் வடிவம் நம்மை வேண்டிப் பெற்றனள்'' என்றார். இறைவன் காரைக்காலம்மையாரை ''அம்மையே'' என்றழைக்க அம்மையார் ''அப்பா'' என்று அவர் செம்பொற் பாதம் பணிந்தெழுந்தார். அவரை நோக்கிப் பரமசிவன் ''நம்பால் நீ வேண்டுவது யாது ?'' என்று வினவ, அம்மையார் அவர்பால் வேண்டிய வரத்தை விளக்குவதாகப் பின்வரும் பாடல் அமைந்துள்ளது.

*திருச்சிற்றம்பலம்*

***இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்***
***பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்***
***மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி***
***அறவா நீ ஆடும்போது உன் அடியின்கீழ் இருக்க என்றார்.***

*திருச்சிற்றம்பலம்*

## பொழிப்பு

எக்காலத்தும் அழிவில்லாத இன்பம்தரும் கருணையைப் பிரார்த்தித்து மீண்டும் வேண்டுகின்றார். இவ்வுலகிலே பிறப்பில்லாத நிலையை அருள வேண்டும். மீளவும் பிறப்பு இருந்தால் எம்பெருமானே உன்னை எப்போதும் மறவாத மனம் வேண்டும். இன்னும் ஒன்று வேண்டும், இறைவா! நீ ஆனந்தநடனம் ஆடும் போது நான் உனது புகழை மகிழ்ச்சியுடன் பாடியவாறு உன் திருவடிக்கீழ் இருக்கும் பேற்றினை அருள்வாயாக! என்று வேண்டினார்.

## அரும்பதம்

| | | |
|---|---|---|
| இறவாத | - | அழிவில்லாத |
| அறவா | - | அறக் கடவுளே |

## பயிற்சி

1. பெரியபுராணம் எத்தனை அடியார்களின் வரலாற்றைக் கூறுகிறது?
2. 'இறவாத இன்ப அன்பு வேண்டும்' என்று வேண்டியவர் யார்? யாரிடம் வேண்டினார்?
3. மீண்டும் பிறப்புண்டானால், யாது வேண்டுமென காரைக்காலம்மையார் வேண்டுகிறார்?

## திருப்புகழ்



திருப்புகழ் முருகப்பெருமானின் அருட்பண்புகளையும் அருட் செயல்களையும் புகழும் நூல். இதனை இயற்றியவர் அருணகிரிநாதர். இவர் பழுத்த புலமையும், முருகப்பெருமானின் திருவருள் அனுபவமும் வாய்க்கப் பெற்றவர். திருவண்ணாமலையைச் சார்ந்த ஓர் ஊரில் பிறந்தவர். திருவண்ணாமலைச் சிவன் கோபுரத்தடியில் எழுந்தருளிய திருமுருகன் திருவருளால் திருப்புகழ் பாடும் ஆற்றல் பெற்றவர். இவர் தமிழகத்தில் உள்ள முருகன் தலம் தோறும் சென்று திருப்புகழ் பாடியுள்ளார். திருப்புகழ் மட்டுமன்றி கந்தரலங்காரம், கந்தரனுபூதி, திருவகுப்பு, வேல்விருத்தம், மயில்விருத்தம், சேவல்விருத்தம் என வேறு நூல்களையும் இவர் அருளிச் செய்துள்ளார்.

*திருச்சிற்றம்பலம்*

**பத்தியால் யான் உனைப் பலகாலும்**
**பற்றியே மாதிருப்புகழ் பாடி**
**முத்தனாமாறு எனைப் பெருவாழ்வில்**
**முத்தியே சேர்வதற்கு அருள்வாயே**
**உத்தமாதான சற்குண நேயா**
**ஒப்பிலா மாமணிக் கிரிவாசா**
**வித்தகா ஞான சத்திநிபாதா**
**வெற்றி வேலாயுதப் பெருமாளே.**

*திருச்சிற்றம்பலம்*

## பொழிப்பு

உத்தமனே! ஈகைக்குணம் உள்ள நற்குணத்தவர்களுக்கு நேசனே! நிகரில்லாத சிறந்த இரத்தினகிரி வாசனே! வித்தகனே! ஞான பக்குவம் அடைந்தவர்க்கு அனுக்கிரக சக்தியாய்ப் பதிகின்றவனே! வெற்றி பொருந்திய வேலாயுதத்தினை ஏந்தியுள்ள பெருமாளே! பக்தியொடு நான் உன்னை எப்பொழுதும் உள்ளத்தில் தியானித்து, சிறந்த உனது திருப்புகழ்களைப் பாடி ஞானநிலை பெற்றவனாகுமாறு, பெருவாழ்வாகிய முத்தி நிலையை அடைய அருள்புரிவாயாக.

## அரும்பதம்

| | | |
|---|---|---|
| பலகாலும் | - | பல முறையும் |
| வித்தகா | - | அறிஞனே |

## பயிற்சி

1. அருணகிரிநாதர் அருளிச் செய்த நூல்கள் எவை?

2. இத்திருப்புகழில் முருகப் பெருமானை விளித்துப் பாடிய சொற்களைத் தருக.

3. அருணகிரிநாதர் முருகப்பெருமானிடம் கேட்கும் வரம் யாது?

## குழுச் செயற்பாடு

*திருமூலரின் கதையைத் தேடியறிந்து வகுப்பறையில் சமர்ப்பியுங்கள்.*